REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 14உ வெள்ளி (30—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 15உ சனி (31—8—57) [இதழ் 66

கிளைக் கழகத் தோழர்களுக்கு :

கொடியைத் தாழப் பறக்கவிடுக!

மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும்வண்ணம், இன்று பகல் முதல் 'அறிவகத்தில், தி. மு. கழகக் கொடி பாதிக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

கிளைக் கழகத் தோழர்களும், மற்றும் சார்பு மன்றத்தவரும் இன்று முதல் மூன்று நாட்களுக்குக் கழகக் கொடியை தாழப் பறக்க விடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமை நிலையம்

கலைவாணர் நம்மை விட்டுப் பிரிந்தார்

கலை ஒளி மறைந்தது; கலை உலகம் இருண்டது

நாடெங்கும் சாவோசை; வீடெங்கும் கண்ணீர் அருவி

சென்னை சோகத்தில் ஆழ்ந்தது

சென்னை, ஆக. 30—

அந்தோ! கொடுமை!! கொடுமை!!! இயற்கை செய்த சதி! எண்ணவே முடியாத கோரம்! தாங்கொணு வேதனை! சோகத்தால் இதயம் குமுறுகிறது! கண்கள் குளமாகின்றன! உள்ளமோ, தேற்றுவாரற்றுத் தேம்புகிறது!.

கலை உலக மாணிக்கம்—பகுத்தறிவுச் செல்வம்—நகைச்சுவை மன்னன்—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், அந்தோ! நம்மை விட்டுப் பிரிந்தார் என்ற கொடுமையை எங்ஙனம் தமிழகத்திற்குத் தெரிவிப்போம்?

நேற்று மாலைதான், நமது அண்ணு அவர்கள் கலைவாணரை மருத்துவமனையில் சென்று பார்த்து வந்தார். நேற்றுவரை, 'உடல்நிலை தேறிவருகிறது' என்ற நம்பிக்கைதரும் செய்திகளே வந்து கொண்டிருந்தன; மாலை, 'உடல்நலம் மீண்டும் சீர்கேடுற்றுவிட்டது' என்ற அறிவிப்பு!

இன்று, தாங்கொணுத சோகச் செய்தி, கலைவாணர் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற வேதனையின் உருவமாக வெளிவந்து, நம்மைத் திடுக்கிடவைத்து விட்டதே! என்ன கொடுமை! என்னே இயற்கையின் சதி!

உடல்நலக் குறைவின் காரணமாக கடந்த ஆகஸ்டு 12-ந் தேதியன்று சென்னை பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கலைவாணருக்கு, தக்க சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது. கலை உலகிற்கு இத்தனை பெரிய நஷ்டம் ஏற்படும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. நகைச்சுவையோடு பகுத்தறிவைக் குழைத்துத் தந்த செம்மல், இத்தனை சீக்கிரம் நம்மைத் தவிக்கவிட்டுச் சென்றுவிடும் என்று எவரே எண்ணினுர்?

நேற்று காலைகூட உடல் தேறி வருவதாகத் தகவல் தந்தனர், மருத்துவமனையினர்; ஆனுல்....ஆனுல்....! அந்தோ! இன்று பகல் 11½ மணி அளவில் அவர் ஆவி பிரிந்தது என்ற சோகம்—கலை உலகின் தன்னிகரற்ற வழிகாட்டும் ஒளிவிளக்கு, கலை உலகை இருளடையச் செய்துவிட்டது—அணைந்துவிட்டது என்ற செய்தி, காட்டுத் தீயென நகரைப் பற்றிக் கொண்டது.

தலைநகரம் சோகத்தில் ஆழ்ந்து விட்டது. வேதனை! வேதனை! எங்கும் காணும் முகமெல்லாம், வீடெல்லாம் வேதனைக்குரல்! கண்ணீர் அருவி!

கலை உலகு, ஈடுசெய்ய முடியாத வழிகாட்டியை—ஒப்புயர்வற்ற செல்வத்தை—நகைச்சுவை மன்னனை—கலைவாணரை இழந்து தவிக்கிறது.

தமிழகம், தன்னைச் சிரிக்கவைத்தே சிந்திக்கச் செய்த பகுத்தறிவுக் கலைஞனை இழந்து தவிக்கிறது.

அன்பும் - பண்பும் நிறைந்த கள்ளமில்லா வெள்ளை உள்ளமும், எப்போதும் இதழ்க்கடையில் தவழும் புன்னகையும், அகமும் - முகமும் மலர்ந்து தரும் அன்புரையும், நகைச்சுவையோடு இணைந்த நற்கருத்தும், இனி எங்கே நமக்குக் காணக்கிடைக்கும்? நாமே, ஆற்றுவாரற்றுத் தேம்புகிறோம்! நாம் யாருக்கு ஆறுதல் தரவல்லோம்? எப்படி ஆறுதல் பெறுவோம்?

கலைவாணர் மறைந்துவிட்டார்; ஆனுல், கலைத்துறை மூலம் பகுத்தறிவு வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணி, பொது வாழ்வுத் துறையில் அவர் காட்டிய அக்கறை, ஏழை எளிய மக்கள்மீது அவர் கொண்டிருந்த அன்பு, அவர்களின் ஈடேற்றத்திற்காக—ஈட்டிய பொருளை எல்லாம் வாரி வழங்கிய வள்ளல்தன்மை, நாடக—திரைப்பட உலகிற்கு அவர் செய்துள்ள சேவை முதலியனவற்றால், அவர் தமிழ் நாட்டில் பெற்றுள்ள புகழ், தென்னவர் உள்ளத்தில் பெற்றுள்ள இடம் என்றும் மறையாது—மங்காது!

★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு' கலைவாணர் அனுதாப இதழ்

நாளை (31—8—57) இதழ், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் இதழாக வெளிவரும்; கலைவாணரைக் குறித்து அண்ணு அவர்கள் தீட்டிய கருத்தோவியம் இடம்பெறும்; கலை உலகிற்கும், தமிழகத்திற்கும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் அளிக்கும் ஆறுதல் செய்தியை அவ்விதழ் தாங்கி நிற்கும்.

சென்னைத் தோழர்களுக்கு நாளை காலையிலேயே இதழ்கள் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

—நிர்வாகி: 'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★★

கலைவாணரை கடைசியாகக் காண!

கலைவாணர் என். எஸ். கே. உடல், பகல் 1 மணியளவில், தியாகராயநகரில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

செய்தி அறிந்ததும், தமிழகத் தலைவர்கள் பலரும், கலை உலகத்தவர்களும், ஆயிரக்கணக்கான மக்களும், கலைவாணருக்குத் தங்களின் இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கக் குழுமியுள்ளனர்.

மக்கள் கூட்டம், தியாகராய நகரில் கட்டுக்கடங்காது போய்க்கொண்டிருக்கிறது.

கலைஞர்களும், துணைவியார் மதுரம் அவர்களும், இதரரும் சூழ, மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, கலைவாணரின் உடல் அவரது இல்லத்தில், மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

கலைவாணரை அண்ணு கண்ட நிலை

நேற்று மாலை சட்டக் கல்லூரியில் பேசி முடித்ததும், இரவு சுமார் 8 மணியளவில் அண்ணு அவர்கள், பெரிய மருத்துவமனை சென்று நோய் வாய்ப்பட்டுக்கிடந்த கலைவாணரைக் கண்டார்.

கலைவாணர், பேச்சு மூச்சற்று, உயிருக்கு மன்ருடும் நிலையிலிருந்ததால், அண்ணு அவர்கள் கலைவாணரைக் காண மட்டுமே முடிந்தது; உரையாட முடியவில்லை.

அண்ணு அவர்களைக் கண்டதும், கலைவாணரின் துணைவியார் டி. ஏ. மதுரம் அவர்கள் 'கோ'வெனக் கதறிவிட்டார்கள். அண்ணுவின் இதயத்தில் குமுறிக்கொண்டிருந்த சோகம், கண்ணீராக வெளிவந்தது.

அண்ணு அவர்கள் கலைவாணரைக் காணச் சென்றபோது, மருத்துவமனையில், எம். ஜி. ஆர்., கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். ஆர். இராதா முதலியோரும் அங்கு இருந்தனர்

இதர கலைஞர்களான, டி. கே. சண்முகம், பகவதி, சந்திரபாபு, சகஸ்ரநாமம், எம். ஜி. சக்ரபாணி முதலியோரும், கண்ணீர் வடித்தவண்ணம், கலைவாணர் அறைக்கு வெளியே நிலை கலங்கி நின்றிருந்தனர்.

அண்ணுவைக் கண்டதும் டி. ஏ. மதுரம் அவர்கள் கதறி அழுத காட்சி பரிதாபமாயிருந்தது.

பிரத்தியேக சிகிச்சை

கலைவாணரை எப்பாடுபட்டேனும் காப்பாற்றிவிட வேண்டுமென உயர்தர மருத்துவ நிபுணர்கள் இரவு பகலெனப் பாராது, இரத்தம் செலுத்தியும், பிராணவாயு செலுத்தியும், ஊசிகள்போட்டும் மிகக் கவலையோடு பிரத்தியேக சிகிச்சையளித்தனர்.

என்ருலும், இயற்கை கொடுமை செய்துவிட்டது! கலைவாணரை கொள்ளை கொண்டு போய்விட்டது!

தொலைபேசி விசாரணை

கடந்த இருநாட்களாகவே கலைவாணரின் உடல்நிலை குறித்து நூற்றுக்கணக்கான தோழர்கள் 'நம் நாடு' அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் கேட்டவண்ணமிருந்தனர்.

வானெலியில்

சென்னை, ஆக. 30—

மறைந்த கலைவாணரின் அருந்தொண்டு குறித்து நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், இதரரும் இன்று (30—8—57) மாலை 7 மணி அளவில் சென்னை வானெலியில் பேசுவர்.

சவ அடக்கம்

சென்னை, ஆக. 30—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் சவ அடக்கம் நாளை (31-8-57) காலை எட்டு மணிக்கு, மயிலை இடுகாட்டில் வைத்து நடைபெறும்.

அவரது உடல், தியாகராய நகரிலிருந்து ஊர்வலமாக இடுகாட்டிற்கு எடுத்து வரப்படும்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ்
சென்னை 30-8-57 வெள்ளி

வாழ்க! மலேயா

நாளைய ஞாயிறு, தென் கிழக்கு ஆசியாவின் இதயமாக விளங்கும் மலேயா நாட்டில், கோலாகலமானதோர் விழாவின் துவக்கத்தினைக் காணுவான்!

ஆகஸ்டு 31-ம் நாள், மலேயா நாட்டின் அறுபத்தைந்து இலட்சம் மக்கள், வெள்ளையர் ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுதலை பெறுகின்றனர்; அன்று, அவர்களது பிறையும் நட்சத்திரமும் பொறிக்கப்பட்ட நான்கு வர்ண சுதந்திரக் கொடி, சுமார் நூற்றெழுபது ஆண்டு அடிமைத்தனத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு மலேயாவில் ஆடிப் பறக்கப் போகிறது!

மக்கள் அனைவரும் மலர்ந்த முகமும், நிமிர்ந்த நெஞ்சமும் கொண்டு வீதிகளில் வீர உலா வருவர்; 'மெர்டேகா'—அதுதான் 'சுதந்திரம்'-வாழ்க, வாழ்கவெனக் குரல் எழுப்பிக் குதூகலிப்பர்; கொண்டாட்டம் நடத்துவர்; இந்த விடுதலைக்காகப் பாடுபட்ட—போரிட்ட அனைவரையும் வாழ்த்துவர்; பாராட்டுவர்; சுதந்திரப் போரில் ஈடுபட்டு உயிர்நீத்த உத்தமர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவர்.

மலேயா, உலகின் மற்றொரு விடுதலைபெற்ற நாடாக முகிழ்ப்பது கண்டு உலகெங்கிலும் உள்ள விடுதலை விரும்பிகள் அனைவரும் மகிழ்வர்; தாயகத்தின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அடிமைப்பட்ட மக்களோ, மகிழ்ச்சி பெறுவதோடு மட்டுமின்றி, புதிய நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் எழுச்சியும், தங்கள் தாயக விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற துடிப்பும் பெறுவர்.

திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் நாம், நமது தாயகம் இடம் பெற்றிருக்கும் ஆசியாக் கண்டத்தில் மற்றொரு நாடு சுதந்திரம் பெறுவதைக் காண மட்டிலா மகிழ்ச்சியுறுகிறோம். மலேயா நாட்டு மக்களுக்கு நமது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்; அதேபோது, நமது தாயகத்தின் கரங்களைப் பிணைத்திருக்கிற அடிமை விலங்கினை அறுத்தெறிய விடுதலைப் போரினைத் தீவிரப்படுத்தும் துடிப்பைத் தருவதால், நன்றியும் செலுத்துகிறோம்.

இன்றைக்கு சுமார் நூற்றெழுபது ஆண்டுகளுக்குமுன், பினாங்கில் 'கெதா' என்ற குறுநிலத்தின் சுல்தானுடன் வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டு காலடி எடுத்து வைத்து, படிப்படியாக ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டு அடக்கி ஆண்டுவந்த வெள்ளை ஏகாதிபத்தியம், நாளை, மலேயா நாட்டிலிருந்து வெளியேற்றப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை, தங்களின் 'நல்லெண்ணம், இரக்கம் இவை நிறைந்த சிந்தையில் கனிந்த கனி' என்று, வெளியேறுகிற வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் கூறிக்கொண்டாலும், சுதந்திரத்தைப் பெறுவதற்காக மலேயா நாட்டு மக்கள் தாண்டியிருக்கிற தடைகள், தாங்கிக்கொண்டிருக்கிற அடக்குமுறைகள், தந்திருக்கிற விலை மதிப்பில்லா உயிர்கள் கொஞ்சநஞ்சமல்ல; அனந்தமாகும்.

விடுதலை வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகி வந்த நேரத்தில் யுத்தம் வந்தது; எசமானர்கள் மாறினர்; வெள்ளையராதிக்கத்திலிருந்த மலேயா ஜப்பான் ஆதிக்கத்திற்கு வந்தது; யுத்தம், ஜப்பானை வீழ்த்திற்று; வெற்றி கொண்ட வெள்ளையர், மீண்டும் மலேயா மக்களை அடிமைகொண்டனர்.

யுத்த விளைவுகளுள் ஒன்றாக உலகெங்கிலும் அடிமைப்பட்டிருந்தோரிடை விடுதலை வேட்கை, எழுச்சியாக உருவெடுத்தது; மலேயாவும் இந்த விளைவைப் பெற்றது.

1948-ல், முதல் முதலாக அரசியல் சீர்திருத்தம் என்ற பெயரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பிரதிநிதித்துவ சட்டசபை ஒன்றை நிறுவ லண்டன் சம்மதித்தது.

தங்களது விருப்பத்தினை அல்ல—விருப்பத்தின் நுனியைக்கூடத் தொடாத இந்த அமைப்புகண்டு மலேயா மக்கள் திருப்திப்படவில்லை. ஆனால் தீவிரவாதிகள், மலேயாவெங்கும் பரந்து கிடக்கும் காடுகளிலிருந்து நடத்திய கொரில்லாப் போரை, 'கம்யூனிஸ்டுகளின் ஆபத்தான நடவடிக்கைகள்' என்று கூறி வெள்ளையராட்சி, 1951-ம் ஆண்டுவரை மலேயா மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு மதிப்பளிக்க மறுத்தது.

1951-ம் ஆண்டில், சர்க்காரின் சில துறை நிர்வாகம் மட்டும் 'மேன்மை தங்கிய பிரிட்டிஷ் மன்னரின் விருப்பத்திற்கொப்ப' இரண்டொருவர்களிடம்—1948-ம் ஆண்டுச் சபையில் உறுப்பினர்களாயிருந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மீண்டும் போராட்டத்தை, 'முழுச் சுதந்திரம்' நோக்கித் தீவிரப்படுத்தினர், மலேயா நாட்டு மக்கள்!

அப்போது மலேயாவிலுள்ள ஒன்பது குறுநிலங்களின் பரம்பரை மன்னர்களான சுல்தான்களிடை நிலவிய ஒற்றுமைக் குறைவையும், மலேயாவில் வாழும் மலேயர், சீனர், 'இந்தியர்'கள் (பெரும்பாலும் தமிழர்) ஆகிய முப்பெரும் இனமக்களிடை நிலவிய ஒற்றுமைக் குறைவையும் காரணமாகக் காட்டி, 1955-ம் ஆண்டு வரை ஆதிக்கத்தை நீடித்துக்கொண்டு வந்தது.

பின், 1955-ம் ஆண்டில் புதியதோர் பெடரல் அரசியல் சட்டப்படி தேர்தல் நடத்தி, மந்திரி சபை அமைக்கப்பட்டது.

துங்கு அப்துல் ரெஹ்மான் தலைமையில் அமைந்த முப்பெரு இனமக்களின் பிரதிநிதிகள்கொண்ட மந்திரி சபைதான் இப்போதைய சுதந்திரத்திற்கு வழிகோலியது. தடையாகக் காட்டப்பட்ட அத்தனை குறைகளையும், 'சுதந்திரம்' என்ற இலட்சிய ஈடேற்றத்திற்காக அரும்பாடுபட்டுக் களைந்து, துங்கு மந்திரி சபை, 'மெர்டேகா' விழாவெடுக்கிறது.

கனிச் செல்வம் பலவும் கொண்ட மலேயாவின் சுதந்திர விழா, நாளை, உலகெங்கிலுமுள்ள விடுதலை விரும்பிகளின் வாழ்த்துடன் கோலாகலமாகத் துவங்கும்.

'சுதந்திர மலேயா எல்லா நலன்களும் பெற்றுத் திகழட்டும்! வாழ்க மலேயா! வாழ்க விடுதலை!' என்ற நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்றைய இந்தியாவில் வேலை நிறுத்தங்கள் தீங்கு பயக்குமாம்!

அவை தோன்றும்போதே பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவேண்டியதுதானும்!

மாநில முதன் மந்திரிகளுக்கு பண்டிதர் அறிவுரை

புதுடில்லி, ஆக. 28—

தபால்—தந்தி இலாகா, மற்றும் இதர துறைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்த முடிவுகள் பற்றி நேரு பண்டிதர், மாநில முதல்வர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறாராம்; அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுவதாவது :—

"அந்தச் சம்பவம், நம் அனைவருக்கும் ஒரு படிப்பினை உடையதாகும்; சர்க்காருக்கும், தொழிலாளருக்கும், இதாருக்கும் படிப்பினை தருவதாகும். நாம் அனைவரும் இந்தப் படிப்பினையை அறியத் தவறுவோமேயானால், இதுபோன்ற சூழ்நிலைகளை நாம் எதிர்காலத்திலும் சந்திக்க நேரிடும். நம் தொழிலாளரைக் குறைகூறக் கூடாது; ஏனெனில், அவர்கள் பொருளாதாரக் கஷ்டங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரச்சினைகள் எழும்போதே அவற்றைச் சமாளிக்க முயற்சிப்பதற்கான வழிகளை நாம் கண்டாகவேண்டும்; அவை நெருக்கடிகளாக உருவெடுக்கும் வரை காத்திருக்கலாகாது.

"பொருளாதார அபிவிருத்திக் கட்டத்திலிருக்கும் இந்த நேரத்தில் நாம், தரக்கூடிய நிவாரணம் வரையறுக்கப்பட்டதாகத்தான் இருக்கமுடியும் என்பது உண்மைதான்; ஏனெனில்; நாம் அளவுக்கு மீறிய நிவாரணமளித்தால், எதிர்கால வளர்ச்சிக்கு ஏதும் இருக்காது.

"இப்போதைய சூழ்நிலைகளில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவது சுலபமல்ல; மேலும், இந்தப் பிரச்சினைகளை அணுகும் முறையினால்கூட பெருங் கஷ்டங்கள் வளருகின்றன; என்றாலும், நாம் பிரச்சினைகளை [illegible] மனிதாபிமான உணர்வுடனும், சிநேகபாவத்துடனும், புரிந்து கொள்ளும் நோக்கத்துடனும் அணுகுவோமேயானால, சந்தேகம் அல்லது அவநம்பிக்கை வெகுவாகக் குறைந்துவிடும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

"துரதிருஷ்டவசமாகச் சிலர், இந்த வேலை நிறுத்தங்களை அரசியல் ஆயுதமாகக் கருதுகின்றனர்.

"நான், தொழிலாளர்களின் இந்த வேலை நிறுத்தத்தை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்த அவர்களுக்குள்ள உரிமையைக்கூட மறுக்கவில்லை; ஆனால், இந்தியாவில் இன்று நிலவும் சூழ்நிலைகளில், அத்தகைய வேலை நிறுத்தங்கள் தொழிலாளருக்கு மட்டுமின்றி பொதுவாக மக்கள் அனைவருக்குமே தீங்குபயப்பனவாகும்; அதிலும், அத்தியாவசிய சர்வீசுகளில் வேலை நிறுத்தம் என்பது, இன்னும் அதிகமான தீங்குபயக்கும் சூழ்நிலைகளை உருவாக்கக்கூடியதாகும்.'

20 ஆண்டுகளுக்குள்

கிரகங்களிடையே பிரயாணம்

'வானவெளியில் கிரகங்களுக்கிடையே பிரயாணம் செய்வதற்கு இன்னும் 20 ஆண்டுகளுக்கு அதிகம் ஆகாது' என்று நியூசிலாந்து விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூமியிலிருந்து வெகு தூரத்திலுள்ள வானவெளி பற்றி இதுவரையில் உலக மக்கள் கொண்டிருந்த பொதுக் கொள்கையெல்லாம் தவறானதென்று இப்போது விஞ்ஞானிகள் கருதுகின்றனராம்!

இந்தி வெறியின் உச்ச நிலைக்கு எடுத்துக்காட்டு!

புதுடில்லி, ஆக. 29—

உலக நாடுகளுக்குப் பொதுவான மொழி ஆங்கிலம் என்பது மறுக்க முடியாததாகும்; இருந்தும், இந்திய அரசாங்கம் தவறான தேசிய உணர்ச்சியின் அடிப்படையில், கண்மூடித்தனமாக செயல்படத் துவங்கியிருக்கிறது.

வெளிநாட்டு அதிபர்களுக்கு இதுவரையில் அழைப்புகள் ஆங்கிலத்திலேயே அனுப்பப்பட்டு வந்துள்ளது; ஆனால், முதன் முறையாகத் தற்போது இந்தியக் குடியரசுத் தலைவரின் அழைப்புகள் இந்தியிலேயே அனுப்பப்பட்டுள்ளதாம்.

இடைக்காலத் தேர்தல்

மழைக்காலத்தில் கிடையாது!

புதுடில்லி, ஆக. 29—

சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சிலர் இறந்துவிட்டதன் காரணமாகவும், பதவியிலிருந்து விலகிக்கொண்டதன் காரணமாகவும் 17 இடங்களில் மீண்டும் இடைத் தேர்தல் நடத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாம்.

இதுவரையில், எட்டு தொகுதிகளில்மட்டும் மறுதேர்தல் நடத்தப்பட்டுள்ளதாம்.

மக்கள் சபைக்கு இதேபோன்று மூன்று தொகுதிகளில் இடைத் தேர்தல் நடத்தவேண்டுமாம்.

'இத்தேர்தல்களை நடத்துவதில் காலதாமதமேன்?' என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது, 'மழைக்காலத்தில் தேர்தல் நடத்தமுடியவில்லை' என்று சட்ட அமைச்சர் பதிலளித்துள்ளார்.

அரசாங்க சேவகர்களின் புதுமுறைப் போராட்டம்

அதிகாரிகளுக்கு வணக்கம் செலுத்த மறுப்பு

பாட்னா, ஆக. 28—

பீகார் அரசாங்கப் பணிமனைகளைச் சேர்ந்த டவாலிச் சேவகர்கள் (பியூன்கள்) தங்களின் அதிகாரிகளைக் கண்டதும் 'வணக்கம்' என்று கூறாமல், மவுனமாக இருப்பதென்று முடிவு செய்துள்ளனராம்.

என். ஜி. ஓ.-க்களின் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் உடுப்பு அணியாமல் வெறும் துணி, பனியன்களை அணிந்து வேலைக்கு வரவும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

சென்னை நகரசபைக்கு சர்க்கார் உதவி

ரூ. 2½ இலட்சம் கடன் கிடைக்கும்

சென்னை, ஆக. 28—

சென்னை நகரசபைக்கு ரூ. 2,39,000 கடன் வழங்க 1957-58-ம் ஆண்டு 'பட்ஜெட்' மதிப்பீடுகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக் சென்னை அரசாங்கம் நகரசபை ஆணையாளருக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

இத்தொகை, நகரிலுள்ள பல்வேறு நகரசபைப் பள்ளிகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுமாம்.

'தென் மண்டலத்தில் மைசூரை சேர்க்காதது ஏன்?'

மைசூரின் 'திரிசங்கு' நிலைகுறித்து மக்கள் சபையில் கேள்வி

'அது பார்லிமெண்ட் செய்த முடிவு' என்கிறார் அமைச்சர்

புதுடில்லி, ஆக. 28—

மேற்கு மண்டலக் கவுன்சிலில் சேர்க்கப்பட்டிருக்கும் மைசூருக்கு ஏற்பட்டிருக்கும் நிலைகுறித்து மக்கள் சபையில் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

"தென்மண்டலக் கவுன்சில் கூட்டத்துக்கு மைசூரையும் அழைப்பது ஏன் ?"

என்று ஆந்திர—கேரள மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்டனர்.

"மைசூரும் அக்கறை செலுத்தக் கூடிய பிரச்சினைகள் தென் மண்டலக் கவுன்சிலில் சம்பந்தப்பட்டிருக்கிறது"

என்று அமைச்சர் தத்தார் பதிலளித்தார்.

'தென் மண்டலக் குழுக் கூட்டங்கள் அனைத்திலும் மைசூர் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களா?' என்று கேட்டதற்கு, 'ஆம்' என்று அமைச்சர் பதிலளித்தார்.

"அப்படியானால், இயல்பாகவே தென் மண்டலத்தில் சேர்ந்திருக்க வேண்டிய மைசூர், மேற்கு மண்டலத்தில் சேர்க்கப்பட்டதற்குக் காரணமென்ன?" என்று எழுந்த கேள்விக்கு அமைச்சர், 'அது பார்லிமெண்டினால் செய்யப்பட்ட முடிவு' என்று கூறியிருக்கிறார்.

தகுதிவாய்ந்தவர்கள்

இனி நியமனம் பெறுவர்!

புதுடில்லி, ஆக. 29—

எல்லா மருத்துவப் பதவிகளுக்கும் தகுதி வாய்ந்த ஆட்களை நியமனம் செய்வதற்கு மத்திய மருத்துவப் போர்டு ஒன்றை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்!

‘சுதந்திரப் போராட்ட விழாவிலும் தென்னாடு வஞ்சிக்கப்படுகிறது’

திருவண்ணமலை தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர் ப. உ. சண்முகம் விளக்கம்

திருவண்ணமலை, ஆக. 29—

18—8—57 மாலை 5½ மணிக்கு திமிந்தகாரத் தெருவில், தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; துவக்கத்தில் இயக்கப் பாடல்கள் பாடப்பட்டன.

கூட்டத்திற்குத் தோழர் முனுசாமி தலைமை தாங்கினர். தோழர் தருமலிங்கம் அவர்கள் இன்றையக் காங்கிரசின் நிலை பற்றிப் பேசினர்.

பின்னர் ப. உ. சண்முகம் அவர்கள் 15—8—57-ல், காங்கிரஸ்காரர்கள் 100-வது சுதந்திரத் தினக் கொண்டாட்டம் கொண்டாடியதின் நோக்கம் பற்றி விளக்கியதுடன், 1857-க்கு முன்பே—1772-ல், தென்னாட்டில் வெள்ளைக்காரரை எதிர்த்து வேலூர் இராணுவப் புரட்சியும், ஊமைத்துரை, கட்டமொம்மன் ஆகியோர் சுதந்திரப் போர்முரசுகள் கொட்டியிருப்பதைச் சுட்டிக் காட்டியும், ஆனல் வடநாட்டில் 1857-ல் இலட்சுமிபாய் என்ற ஜான்சி இராணி போராடியதை மட்டும் எடுத்துக் கொண்டு ‘100-வது ஆண்டு’ கொண்டாடும் அவல நிலையை விளக்கியும் பேசினர்.

மேலும் அவர், சட்டசபையில் தி. மு. கழகம் மக்கள் நலனுக்காகப் போராடும் நிலைபற்றியும் விளக்கினர்.

அமெரிக்க - ரஷ்யப் போர்க் கப்பல்கள்

மத்தியதரைக் கடலில் குவிகின்றன ?

லண்டன், ஆக. 28—

மத்தியதரைக் கடலில் அமெரிக்க—ரஷ்யக் கடற்படைகள் குவிந்துவருவதாகச் செய்திகள் கிடைத்துவருகின்றன.

மத்தியதரைக்கடலில் உள்ள 6-வது கடற்படையுடன் சேர்வதற்காக அமெரிக்காவிலிருந்து 188 போர்க் கப்பல்கள் மத்தியதரைக் கடலுக்குப் புறப்பட ஆயத்தமாயிருக்கின்றன என்று ‘டெய்லி ஹெரால்டு’ இதழ் கூறுகிறது. இதன் விளைவாக ரஷ்யாவும் தன்னிடமுள்ள பெரிய கப்பல்களை அங்கு அனுப்பிவைத்திருப்பதாக அதே பத்திரிகை கூறுகிறது.

இதற்குமுன்பே, ஒரு ரஷ்யக் குருய்சரும், நாசகாரிக் கப்பலும் ஜிப்ரால்டர் வழியாக மத்தியதரைக்கடலுக்குச் சென்றிருக்கின்றனவாம்.

விமானமில்லாமல்

சென்று தாக்கும் குண்டுகள்

மாஸ்கோ, ஆக. 28—

விமான உதவியின்றியே உலகின் எந்தப் பகுதிக்கும் சென்று தாக்கக் கூடிய ‘ராக்கெட் குண்டு’ ஒன்றை ரஷ்யா சோதித்து வெற்றி கண்டுள்ளதாம்.

இதே மாதிரியான சோதனையில் அமெரிக்கா ஏற்கனவே தால்வி கண்டிருக்கிறது.

கல்வி வளர்ச்சிக்கு பணம்

பொருட்காட்சி மூலம் பெற முடிவு

சேலம், ஆக. 27—

இராசிபுரம் நகராண்மைக் கழக கூட்டம் உதவித் தலைவர் ஏ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது அந்த ஆண்டில், முதன் முதலாக இராசிபுரம் நகராண்மைக் கழகச் சார்பில் பொருட்காட்சி ஒன்று நவம்பர் முதல் தேதிமுதல் 17-ந் தேதிவரை நடத்த முடிவு செய்யப்பட்டது. பொருட்காட்சியின் மூலம் கிடைக்கும் நிகர இலாபம் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக செலவழிக்கப்படும். (ந—நி.)

முரப்பநாடு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

22—8—57 இரவு 7 மணிக்கு, நெல்லை மாவட்டம் முரப்பநாடு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் கரீம் தலைமையில் நடைபெற்றது. கழகக் கொள்கைகளையும், இன்றைய அரசியல் நிலைமையையும் விளக்கி தோழர்கள் எம். எஸ். அரியமுத்து, என். சங்கரலிங்கம், வழக்கறிஞர் இரத்தினவேல்பாண்டியன், மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

பலுவூர் தி. மு. கழகத்

துவக்க விழாப் பொதுக்கூட்டம்

கண்ணதாசன், தர்மலிங்கம் கலந்துகொண்டனர்

திருச்சி, ஆக. 29—

9—8—57 மாலை 8 மணியளவில், பலுவூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். நெடுமாறன் தலைமையில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கண்ணதாசன், அன்பில்-தர்மலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அவர்களுக்குப் பாராட்டு

விருதுநகர், ஆக. 28—

16-8-57 மாலை 5-15 மணிக்கு நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் தோழர் சுப்பையா தலைமையில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் அண்ணமலைப் பல்கலைக் கழக செனட் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமை குறித்துப் பாராட்டும்—தேநீர் விருந்தும் நடைபெற்றது; தோழர்கள் எஸ். இரத்தினம், சுப்பையா மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்து தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசினர்.

பொதுக்கூட்டம்

அன்று இரவு 8-30 மணிக்கு நெல்லுக்கடை மைதானத்தில் தோழர் தானியல் இயக்கப் பாட்டுடன், தோழர் எம். எஸ். சி. நாராயணசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் எஸ். இரத்தினம், சுப்பையா, அரங்கநாதன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள், கழக இலட்சியம் குறித்தும், சட்டசபையில் கழகத்தின் பணி குறித்தும் பேசினர்.

அவருக்கு நகர தி. மு. கழகம், கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம், எம். எஸ். பி. படிப்பகம், வி. வி. ஆர். படிப்பகம், விருதை எம். ஜி. ஆர். அபிமானிகள், எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவற்றின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன; சூலக்கரை டெக்ஸ்டைல் தி. மு. கழகத் தோழர்கள் சார்பிலும் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டது.

செயற்கை முறையில் நில நடுக்கம்

ஜப்பான் விஞ்ஞானிகள் பரிசோதனை

மத்திய ஜப்பானில் செயற்கை முறையில் ஒரு நிலநடுக்கத்தை விஞ்ஞானிகள் ஏற்படுத்தினர். தரையின் அமைப்பு, வலிமைபற்றிக் கண்டறிவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டதாம்.

இந்தச் செயற்கை நில நடுக்கத்தின் விளைவாக சுமார் நூறு கெச தொலைவுக்கு நில அதிர்ச்சி ஏற்பட்டதாம்.

ஒரு டன் எடையுள்ள ‘டைனமெட்’ வெடியை தரைக்குக்கீழ் 70 மீட்டர் ஆழத்தில்வைத்து வெடிக்கச் செய்ததன் மூலம் இந்த நில நடுக்கம் ஏற்படச் செய்தார்களாம்!

மோட்டார் கம்பெனிகளுக்குப் பண உதவி

அரசாங்க பாங்கி தருமாம்

தவணைக் கடன் முறையில் தங்களின் புதிய கார்களை விற்பனை செய்யும் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக, நாட்டிலுள்ள மோட்டார்கார் உற்பத்தியாளர்களுக்கு முன்பணம் கொடுத்துதவுவதுபற்றி அரசாங்க பாங்கி யோசித்துவருவதாக மக்கள்சபையில் உதவி நிதியமைச்சர் பகத் தெரிவித்தார்.

வால் நட்சத்திரம் தோன்றுவதேன்?

ஒரு வரலாற்றுக் கண்ணேட்டம்

வால் நட்சத்திரங்கள் ஏன் தோன்றுகின்றன? எப்படித் தோன்றுகின்றன?—என்பது பற்றிய தத்துவம், இன்னும் திருப்திகரமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. 1921 ஜூன் மாதம், இப்பரந்த பூமி பான்ஸ்-வின்னக்ஸ் வால் நட்சத்திரத்துடன் மோதிவிடக்கூடிய ஆபத்து ஏற்பட்டது; ஆனல், அந்த வால் நட்சத்திரம் சற்று முன்னதாகவே அதன் அதிசமீப இடத்தைத் தாண்டிவிட்டபடியால் ஆபத்து நேரிடவில்லை. இம்மாதிரியான ஆபத்து 150 இலட்சம் ஆண்டிற்கு ஒருமுறை சராசரியாக ஏற்படலாம். எதிர் காலத்தில், இந்த மோதுதல் ஏற்படாது என்ற நிலை இல்லை; ஆனல், அப்படி ஏற்பட்டாலும்கூட, பூமிக்குப் பாதகம் எதுவும் ஏற்படாது. ஏனெனில், வால் நட்சத்திரத்தில் அடங்கிய பொருள்கள் நுண்ணிய பொருள்களாய் இருக்கின்றன.

வால் நட்சத்திரங்கள், சூரியனின் இழுக்கும் சக்தியால் அடிக்கடி ஆகாயத்தில் காணப்படுகிற பொருள்களாகும். அவைகளுக்கு வால்போல் நீண்ட ஒரு பகுதி இருப்பதால் அவை, வால் நட்சத்திரங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. அதன் ஆங்கிலப் பெயரும் ஏறக்குறைய இதே அர்த்தமுள்ளதுதான்.

ஆண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வீதம் இப்போது வால் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. 1932-ல்தான் உச்ச எண்ணிக்கை—13 காணப்பட்டது. சூரியக் குடும்பத்தில் சுமார் 1,20,000 வால் நட்சத்திரங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குடும்பத்தில் அவைதான் ஏராளமாக இருக்கின்றன.

சூரியனுக்கும் வால் நட்சத்திரத்துக்குமுள்ள தூரம் 90,000 மைலிலிருந்து கோடி மைல்கள் வரை இருக்கும். அதேபோல் அவைகளின் நடமாட்ட காலமும் 3½ ஆண்டு முதல் 10,00,000 ஆண்டுவரை இருக்கும்; சராசரி காலமும் 40,000 ஆண்டுகள்!

தொலைநோக்கிக் கண்ணுடியில் முதலில் படலம் போன்ற, தெளிவற்ற உருவத்தில் வால் நட்சத்திரம் காணப்படும். பிறகு சற்றுத் துல்லியமானவுடன் மூன்று பகுதி — தலை, மூலக் கரு, வால் — தெரியவரும். தலைப்பகுதி மேகப் படலம்போல் தனி உருவமுள்ளதாய்—ஆனல் கருக்கான விளிம்பில்லாததாய் இருக்கும். அதன் வடிவம் வட்டமாகவோ, நீள வட்டமாகவோ இருக்கும். மத்தியில் இருக்கும் பிரகாசமான பகுதிதான் மூலக் கரு. அதன் வடிவம் நட்சத்திரம்போல் இருக்கும். தலைப் பகுதியிலிருந்து பிரகாசமான வால் நீண்டுகொண்டிருக்கும். உருளை வடிவமான அந்த வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே நீண்டிருக்கும்.

வால் நட்சத்திரங்களின் அளவும் பல்வேறாக இருக்கும். மூலக் கருவின் குறுக்களவு சில நூறு மைல்களிலிருந்து பல ஆயிரம் மைல்கள்வரை இருக்கும். சில சமயங்களில் தலைப்பகுதி சூரியனைவிடப் பெரிதாக இருக்கும். வெறுங் கண்ணுக்குத் தெரிகிற வால் நட்சத்திரத்தின் வாலின் நீளம் இலட்சக்கணக்கான மைல்களாக இருக்கும்; ஆனல் சில பிரச்சினைகளில் அது பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரத்தைக் காட்டிலும் அதிகமாகவும் இருக்கலாம்.

அந்த நட்சத்திரத்தின் வால், கதிரியக்க அணுத் துகள்களும் வாயு அணுக்களும் சேர்ந்ததாக இருக்கும். சூரியனிலிருந்து வீசுகிற கதிரியக்க சக்தியும், தலைப் பகுதியிலிருந்து கிளம்புகிற மின்சார எதிர்ப்புச் சக்தியும் காரணமாய், வால், சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே எப்போதும் இருக்கும்படி அமைகிறது.

பணமுட்டைகளுக்குப் பயந்து சட்டமியற்றத் தவக்கமேன்?

சேலத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேச்சு

சேலம், ஆக. 27—

25—8—57 மாலை அம்மாப்பேட்டை செல்வம் சதுக்கத்தில் தோழர் ஆதிசிவம் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

நகர தி. மு. கழகச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன், மற்றும் தோழர்கள் சே. பி. நஞ்சப்பன், வி. சிவப்பிரகாசம், சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“ ‘சட்டசபைக்கு 15 பேர் சென்றீர்களே? என்ன சாதித்து விட்டீர்கள்’ எனப் பலர் கேட்கின்றனர். ஒரு பெரிய போலீஸ் அதிகாரிமீது தி. மு. கழகத் தோழர் அன்பழகன் புகார் தெரிவித்தார்; அதை விசாரிக்க ஒரு நீதிபதியை சர்க்கார் உடனடியாக நியமித்தார்கள். தவறாக நடக்கும் பெரிய அதிகாரிகள் யாராக இருந்தாலும் பயப்படாமல் தி.மு. கழகம் எடுத்துக்காட்டும்; இது தான் ஜனநாயக முறை. தி. மு. கழக அங்கத்தினர்கள் சுயநலத்திற்காக சட்டசபைக்குச் செல்லவில்லை.

“சட்டசபையில் சேலம் காங்கிரஸ் எம். எல். ஏ.-வான ஏ. மாரியப்பன், நெசவாளர் பிரச்சினைக்கு எதிராக வாக்களித்ததாக இங்கு பேசிய தோழர் ஒருவர் குறிப்பிட்டார்; எல்லாக் காங்கிரஸ்காரர்களுமே இப்படித்தான். தேர்தலுக்குமுன் பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள்; தேர்தல் முடிந்ததும் அவைகளைப்பற்றிக் கவலைப்படாமல் தங்களிஷ்டம்போல் எதிரான செயல்களைச் செய்கிறார்கள்.

“சென்னைக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைப்பதற்குக்கூட எதிராகத்தான் காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் வாக்களித்தார்கள்.

“வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டுசென்னை மாநிலத்தில் உள்ள காங்கிரஸ்காரர்கள் நடக்க வேண்டியதாக உள்ளது; அதனல்தான், நமக்கு எதிரான செயல்களைச் செய்கிறார்கள். வடநாட்டுப் பிடிப்பில் இருக்கும்வரை நம் மாநிலத்திற்கு உருப்படியான காரியங்களைச் செய்ய முடியாது.

“தி. மு. கழக உறுப்பினர்களோ காங்கிரஸ்காரர்களைப் போல் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். சென்னை மாநிலத்திற்கு எவை நல்ல காரியங்கள் என்று தெரிகிறதோ, அவற்றைப் பற்றி தாராளமாகச் செய்ய முற்படுவார்கள்.

“சேலத்தில் சுமார் 300 பீடித் தொழிலாளர்கள் போராட்டத்தில் கைது செய்யப்பட்டதாக இங்கு கூறப்பட்டது. பீடித் தொழிலாளர்களுக்குச் சட்டம் கொண்டு வந்திருந்தால் இந்தப் போராட்டம் நடந்திருக்காது. முதலாளிக்குப் பாதகமாக இருக்கும் சட்டங்களைக் கொண்டுவர காங்கிரஸ் சர்க்கார் பின்வாங்குகிறது. தேர்தல் காலங்களில் பெரிய முதலாளிகள் 5 அல்லது 10 இலட்சம் ரூபாய் என்று காங்கிரசுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவேதான், முதலாளிக்கு எதிரான சட்டங்களை காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவர பின்வாங்குகிறார்கள்.

“தி. மு. கழகத்திற்கு எல்லோரும் ஆதரவு அளித்து இன்னும் பலம் பொருந்தியதாகச் செய்ய வேண்டும்.” (ந—நி.)

நம் நாடு துவக்கப் பள்ளி

அதிராம்பட்டினத்தில் என். எஸ். இளங்கோ நிர்வாகத்தில் இயங்குகிறது

அதிராம்பட்டினத்தில் ‘நம் நாடு துவக்கப்பள்ளி’ என்னும் பெயரால் ஒரு துவக்கப் பள்ளி தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களின் நிர்வாகத்தில் துவக்கப்பட்டுள்ளது.

9—8—57 அன்று துவக்கப்பட்ட பள்ளி சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஊர்ப் பிரமுகர்கள் பலரும் துவக்கத்தில் வந்திருந்து சிறப்பித்தனர்.

துவக்க விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

டமாஸ்கஸ், ஆக. 29—

ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருசேவ் ஆகியோர் இந்த ஆண்டு இறுதிக்குள் சிரியாவுக்கு செல்லக்கூடும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியத் துறையில் மூன்று பிரிவுகள்

பொது ஊழியக் குழு முடிவுகள்

புதுடில்லி ஆக. 29—

1955 ஏப்ரல் திங்களில் டாக்டர் ஏ. இராமசாமி(முதலியார்) தலைமையில், பொது ஊழியக் குழு அமைக்கப்பட்டது. குழுவின் முடிவுகள் இப்போது வெளியாகியுள்ளது.

பதவிகளை மூன்று பிரிவுகளாக அந்தக் குழு பிரித்துள்ளது; பெரிய அதிகாரிகள், நடுத்தர அதிகாரிகள் குமாஸ்தாக்கள் என்பதே அந்த மூன்று பிரிவுகளாகும்.

முதல் பிரிவில் 21 முதல் 23 வயது நிரம்பிய பட்டதாரிகளுக்கே ஊழியம் தரப்பட வேண்டும்.

இரண்டாவது பிரிவுக்கு வயது 19 முதல் 21 இருக்க வேண்டும் என்றும், பட்டதாரிகள் விரும்பினால் மற்றவர்களுடன் போட்டியிட்டு வேலை பெறலாம் என்றும் குழு அறிவித்துள்ளது.

மூன்றாவது பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், 17 முதல் 19 வயதுக்குள் உள்ளவர்களை உரியவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் குழு கூறியுள்ளது.

தொழில் துறையில் வயதைப் பற்றிய கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் குழு தெரிவித்துள்ளது.

இந்தித் திணிப்புக்கு மாணவர்கள் எதிர்ப்பு

மதுரையில் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஆக. 29—

இந்திய அரசாங்கம் இந்தி மொழியைத் தென்னாட்டில் புகுத்துவதைக் கண்டித்து மதுரையில் உள்ள 3 ஆண் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் இன்று வகுப்புகளுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். 2,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் ஊர்வலமாகச் சென்று, ராஜாஜி பூங்காவில் கூட்டம் நடத்தி, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இரு கல்லூரிகளில் வகுப்புகள் நடைபெறவில்லை.

நேரடிப் பேச்சுகள் தகராறுகளைத் தீர்க்குமாம்!

புதுடில்லி, ஆக. 29—

இந்தியத் தொழில் மாநாடு நியமித்த முக்கூட்டு துணைக்குழு, தொழில் கட்டுப்பாடு ஒழுங்கு முறைகள் பற்றி ஒரு நகல் திட்டம் தயாரித்துள்ளதாம்.

இனி தொழில் துறையில் ஏற்படும் தொழில் தகராறுகள், குறைகள், வேற்றுமைகள் ஆகியவைகளை நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்முடிவுகளை தொழில் அதிபர்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது சட்டத்தின் முக்கிய அம்சமாம்!



'உயர்தர அறிவு வளர்ச்சிக்கு ஆங்கிலம் அவசியம்'

'இந்தி கட்டாயப்படுத்தப்படக் கூடாது'

'இந்து' உதவி ஆசிரியர் கருத்து

சென்னை, ஆக. 27—

"ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டு வருகிற எல்லாக் காரியங்களுக்கும் அதற்குப் பதிலாக இந்தியை உபயோகிக்க வேண்டுமானுல் அதற்கென ஒரு காலவரையறை நிர்ணயிக்கக்கூடாது, என்றும் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெறுவதை அதன் போக்கிற்கு விட்டுவிட வேண்டும் என்றும் 'இந்து' இதழின் உதவி ஆசிரியர் வி. கே. நரசிம்மன் என்பார் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசிய அவர், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை அமர்த்தும் விவகாரத்தில் நிர்ப்பந்தம் எதும் இருத்தலாகாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வெகு சீக்கிரத்தில் அவசரப்பட்டு இந்தியை ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்தினால், திறமையான நிர்வாகத்தை எதிர்பார்க்க முடியுமா என்றும் அவர் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

உயர்தரப் படிப்பிற்கு ஆங்கிலமே நல்ல துணையாக இருக்க முடியும் என்பதால், மாற்றத்திற்குப் பிறகும்கூட பல துறைகளிலும் உயர்தர அறிவு வளர்ச்சி பெறும் பொருட்டு, ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

அரிசி ஆலையில் திடீர் சோதனை!

ஒரு இலட்சம் மணங்கு அரிசி பறிமுதல்

கல்கத்தா, ஆக. 29—

கல்கத்தாவிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள 200-க்கு மேற்பட்ட அரிசி ஆலைகளில் ஒரே சமயத்தில் வங்கப் போலீசார் சோதனையிட்டு ஒரு இலட்சம் மணங்கு அரிசிக்கு மேல் கைப்பற்றினர் என்று தெரியவருகிறது.

இத்திங்களில் மத்திய அரசாங்கம் 15,000 டன் அரிசியை வங்கத்திற்கும் அளித்துள்ளது.

இப்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ள அரிசியுடன் வரும் மழைக்காலம் முழுவதும் சமாளித்துவிட முடியும் என்று கருதப்படுகிறது.

ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள

முந்திரி சேதமாகும்?

50,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்த எதிரொலி

கொல்லம், ஆக. 30—

ஆக. 26-ந் தேதியன்று கொல்லம் பகுதியில் ஆரம்பமான முந்திரித் தொழிலாளர் வேலை நிறுத்தம், இப்போது 127 தொழிற்சாலைகளுக்குப் பரவியிருக்கிறதென்றும், 50,000 தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனரென்றும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யவேண்டியிருக்கிற சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள பொரித்த முந்திரிக் கொட்டைகள் இவ்வேலை நிறுத்தத்தினால் சேதமாகும் நிலைமையிலுள்ளன வென்றும், நிர்வாகத்திற்கு இதனால் ரூ. 1 கோடி நஷ்டமேற்படக்கூடுமென்றும் அச்செய்தி கூறுகிறது.

$4\frac{1}{2}$ சதவிகிதத்திற்கு அதிகமாக இலாபத்திலிருந்து தொழிலாளர்களுக்கு வெகுமதி (போனஸ்) தரமுடியாது என்று நிர்வாகிகள் கண்டிப்பாகக் கூறிவிட்டனராம்; தொழிலாளர்கள் 8 சதவிகிதம் தரவேண்டுமென்று கோரியுள்ளனர்.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் விளைவு

விவசாய உரம் வாங்குவதில் நெருக்கடி ஏற்படும்?

புதுடில்லி, ஆக. 28—

இந்தியாவில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி முறையைப் புகுத்தினாலொழிய விவசாயத் துறையில் தொழில் நுணுக்கங்களைக் கையாள முடியாது என்றும், நாட்டில் சிறு சிறு துண்டுகளாக உள்ள நிலங்களை வைத்துக்கொண்டு அவற்றில் தொழில் நுணுக்க விவசாயம் செய்வது கடினம் என்றும் மாநிலங்கள் சபையில் விவசாய அமைச்சர் ஏ. பி. ஜெயின் தெரிவித்தார்.

அந்நியச் செலாவணியிலுள்ள சங்கடங்களின் விளைவாக மாநிலங்களின் தேவைகளுக்கான அதிகப்படியான உரங்களுக்கு வெளிநாடுகளில் ஆர்டர் கொடுக்கப்படவில்லையென்றும், சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருந்த ஆர்டர்களுக்கான இறக்குமதியே இன்னும் நீடித்து நடந்து வருவதாகவும் அவர் கூறினார்.

சென்னை-பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை-கொருக்குப்பேட்டை (5-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில் 31—8—57ல் நடைபெற இருந்த பொதுக்கூட்டம், அண்ணா அவர்களின் வேண்டுகோளின்படி 25—10—57-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குளியமுத்தூர் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

1—9—57 மாலை 7 மணியளவில் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில நடைபெறும். அதுபோது ஆக்கப்பணிகள் பல பற்றியும், செப்டம்பர் பிரிவினை வார விழா பற்றியும் முடிவு காணப்படும்.

கிழப்பழூர் திராவிட விவசாய சங்கத் துவக்க விழா

1—9—57 இரவு 8 மணிக்கு கிழப்பழூர் பாண்டியனார் திடலில் மேற்படி விழா நடைபெறும்; தோழர் டி. எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ. தலைமை வகிப்பார்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வழக்கறிஞர் செவந்தி, ஆ. திராவிடமணி, ஏ. இராமநாதன் மற்றும் பலர் பேசுவர். மாலை 4 மணிக்கு ஊர்வலம் நடைபெறும்.

ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கான சபா (Regd.) சென்னை-1.

31—8—57 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ராஜா அண்ணாமலை மன்றத்தில்

எஸ். எஸ். ராசேந்திரன் நாடக மன்றம் அளிக்கும்

"மணி மகுடம்"

நடிகர்கள்: எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி மற்றும் பலர்.

டிக்கெட்டுகள்: ரூ. 10, 5, 3, 2 & 1.

சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து அண்ணாமலை மன்றத்தில் டிக்கெட்டுகள் விற்கப்படும்.

அண்ணா நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

சில தவிர்க்கமுடியாத காரணங்களால் ஆகஸ்டு 31-ந் தேதி முதல் செப். 7-ந் தேதி வரை அண்ணா அவர்கள் கலந்து கொள்ள இருந்த நிகழ்ச்சிகளை யனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெற ஏற்பாடாகியிருந்த கூட்டங்களை அக்டோபர் இறுதியில் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

குன்னத்தூர்:
தேர்த் திடலில்
1—9—57 இரவு 7 மணிக்கு
தி. மு. க. ஆண்டு விழா
தலைவர்: என். டி. இராமசாமி
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
ஜீ. ஏ. வேங்கடாசலம்
க. அன்பரசு

★

முருங்கப்பாக்கம்:
(புதுவை வட்டம்)
திரௌபதியம்மன்கோவில் திடலில்
1—9—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர்: சு. பெருமாள்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். ஜீவரததினம்
ச. சிவப்பிரகாசம்

★

சின்னாளப்பட்டி:
வள்ளுவர் திடலில்
1—9—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. இராமநாதன்
மற்றும் பலர்

★

தஞ்சை:
திலகர் திடலில்
1—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். பெத்தண்ணன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
அறிவுடைநம்பி

★

மிமிசல்:
(சத்திரம் முகப்பில்)
1—9—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: ஜி. இரத்தினம்
கொடியேற்றுபவர்:
எஸ். எஸ். அஜிபா
பேசுவோர்:
மதுரை எஸ். முத்து
கே. கே. நிஜாமுதீன்
இரா. இராசகோபாலன்
இன்னிசை: பந்நா

மதுரை தி. மு. க. உட்கிளைகள் படிப்பகச் செயலாளர்கட்கு:

1—9—57 காலை 10 மணிக்கு மதுரை நகர தி. மு. க. கட்டிடத்தில், நகர உட்கிளை, படிப்பகச் செயலாளர்களின் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் 'திராவிடப் பிரிவினை வாரம்' கொண்டாடுவது பற்றி ஆராயப்படும்.

தஞ்சை வட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

1—9—57 காலை 10 மணியளவில் திருக்காட்டுப்பள்ளி தி. மு. கழகப் பணிமனையில், தஞ்சை வட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெறும். தேர்தல் அதிகாரியாக மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் சு. முத்தீசுவரன், தேர்தலை நடத்திவைப்பார். கிளைக் கழகங்களின் செயலாளர்கள்மட்டுமே கூட்டத்தில் அனுமதிக்கப்படுவர்.

தமிழகஎல்லைப் பிரச்சினைக்கூட்டம்

பழவேற்காடு இளைஞர் முற்போக்குக் கழகத்தின் சார்பில், தமிழக எல்லைப் பிரச்சினைப் பொதுக்கூட்டம், நாளை 31-8-57 சனியன்று மாலை 6மணி அளவில் நடைபெறும். கூட்டத்தில் தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், இராசு. சு. மணி ஆகியோர் பேசுவர்.

திருச்சி நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு:

1—9—57 காலை 9 மணிக்கு திருச்சி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 'ஹோலி கிராஸ்' ரோடில் உள்ள முனிசிபல் சத்திரத்தில் நடைபெறும்; அதுபோது, நங்கவரம் விவசாயப் போராட்டம் மற்றும், கழக வேலைத் திட்டம் குறித்து ஆராயப்படும்.

சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

31—8—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சூளை, மாணிக்க செட்டித் தெரு 10-ம் எண் இல்லத்தில், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், தோழர் எஸ். எம். பாசில் 'எம். என். ராய்' என்ற தலைப்பில் பேசுவார்.

நக்கீரர் பட்டி மன்றம்

31—8—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை — பெத்துநாயக்கன் பேட்டை மணவழகர் மன்றத்தில் (2, முருகேச முதலித் தெரு) நக்கீரர்பட்டிமன்றச் சார்பில், தோழர் மா. இளஞ்செழியன் தலைமையில் 'கூட்டுறவு முறையும் நமது நாடும்' என்பது பற்றி தோழர்கள் த. மா. பாலசுந்தரம், ஐ. சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அரசியல் வகுப்பு

1—9—57 மாலை 7 மணிக்கு சென்னை—சைதை தி. மு. கழகச் சார்பில், விசாகத் தோட்டம் சொர்ணாம்பிகை பனையக்காட் லுங்கி கம்பெனியில், திரு. அ. ச. நடராசன் அவர்களால் அரசியல் வகுப்பு நடத்தப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.